# SG Digital

## Wireless@SGx பயன்பாட்டு வழிமுறைகள்

## உங்களுக்குத் தெரியுமா?

நீங்கள் Wireless@SGx பயன்படுத்தி நாடெங்கிலும் இலவசமாக இணையத்தைப் பயன்படுத்தலாம். சிங்கப்பூரின் ஆகப்பெரிய இலவச Wi-Fi கட்டமைப்பான இது, கம்பி இணைப்பில்லாத பாதுகாப்பான, தடங்கலற்ற இணைப்பையும் வரம்பற்ற டேட்டா பயன்பாட்டையும் வழங்குகிறது.

go.gov.sg/ConnectWSGx-ல் மேல்விவரம் அறியலாம்

## படிநிலை 1 உங்கள் கைப்பேசியில் Wireless@SGx செயலியை நிறுவுங்கள்

ஆப்பிள் ஆப் ஸ்டோர் அல்லது கூகல் பிளே ஸ்டோர் சென்று, Wireless@SGx செயலியைப் பதிவிறக்கம் செய்து, செயற்படுத்துங்கள்.




**1.** செயலியை உங்கள் கைப்பேசியில் செயற்படுத்த 'Let's Go' மீது தட்டுங்கள்.




**2.** விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் படித்த பிறகு, 'Accept & Continue' மீது தட்டுங்கள்.

## படிநிலை 2A SIM அட்டை உள்ள கைப்பேசியில் Wireless@SGx இணைப்பை அமைத்திடுங்கள்







**ஐஓஎஸ் பயன்பாட்டாளர்கள்**

தங்கள் சாதனத்தில் Wi-Fi அடையாளத்தை நிறுவ வழிகாட்டப்படுவார்கள். படிப்படியான வழிகாட்டலைப் பின்பற்றி, செயற்படுத்தலைப் பூர்த்தி செய்யுங்கள்.




**3.** செயலி நீங்கள் இருக்குமிடத்தை அணுகுவதற்கு அனுமதி கொடுங்கள்.

*மேற்காணும் படங்கள் ஐபோன் திரையிலிருந்து எடுக்கப்பட்டன.*

## படிநிலை 2B SIM அட்டை இல்லாமல் கைப்பேசியில் Wireless@SGx இணைப்பை அமைத்திடுங்கள்




**4.** செயலியில், "More" மற்றும் "Setup" தேர்ந்தெடுங்கள். ஏதாவதொரு சேவை நிறுவனத்தைத் தேர்ந்தெடுத்து, உங்கள் பெயரையும் உள்ளூர் கைப்பேசி எண்ணையும் உள்ளிடுங்கள்.







**5.** குறுந்தகவல்வழி உங்களுக்கு அனுப்பி வைக்கப்படும் ஒற்றைப் பயன்பாட்டு மறைச்சொல்லை (OTP) உள்ளிட்டு, பதிவைப் பூர்த்தி செய்யுங்கள்.

## இணையப் பாதுகாப்புக் குறிப்புகள் *(நன்றி: சிங்கப்பூர் இணையப் பாதுகாப்பு அமைப்பு)*

- பயன்படுத்திய பிறகு Wi-Fi இணைப்பிலிருந்து அல்லது கணக்கிலிருந்து வெளியாகிவிடுங்கள்.
- ஒவ்வோர் அங்கத்திற்குப் பிறகும் இணைய உலாவியின் பதுக்ககத்தையும் (cache) பயன்பாட்டுப் பதிவுகளையும் (internet history) அழித்துவிடுங்கள்.
- உண்மையானதுபோல பாசாங்கு செய்யும் "இலவச" Wi-Fi ஹாட்ஸ்பாட்-களிடம் கவனமாக இருங்கள். நீங்கள் Wireless@SGx இணைப்பை அமைத்த பிறகு, எந்தவொரு Wireless@SG கட்டமைப்புடனும் நீங்களாக இணைக்கக்கூடாது. அதற்குப் பதிலாக, உண்மையான Wireless@SGx கட்டமைப்புடன் சாதனம் தானாக இணைய அனுமதிக்கவேண்டும்.

SG:DIGITAL

INFOCOMM MEDIA DEVELOPMENT AUTHORITY